தலைமைச் செயலகத்தில், நேற்று (14.11.2024) தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தலைமையில் திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் 10.12.2024 அன்று திருத்தேர் திருவிழா மற்றும் 13.12.2024 அன்று திருக்கார்த்திகை தீபத்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு முதன்மைச் செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் ரூ.763 கோடி அளவுக்கு முதலீடுகளை அலிசன் டிரான்மிஷன் நிறுவனம் மேற்கொள்ள உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா முன்னிலையில் 13.11.2024 அன்று செய்யப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், தமிழக தொழில் துறை செயலர் அருண்ராய் உள்ளிட்ட உயரதிகாரிகள் உடனுள்ளனர்.

எஸ்.ஜி.மாதவன் தலைமை! ரமணி மாதவன் எம்.சி. முன்னிலை!

மதுரவாயல் 147 வது வட்டக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

பி.டி.பாண்டிச்செல்வம் - நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. ஆலோசனை வழங்குகின்றனர்!

சென்னை, நவ. 15

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்ட தி.மு.க. சார்பில் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் (BLA.2) கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (15.11.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணிக்கு, ஆலப்பாக்கம், பாலாஜி அவன்யூ, பிருந்தா இல்லத்தில் நடைபெறுகிறது.

147 வது வட்டக் கழகச் செயலாளர் (எஸ்.ஜி.மாதவன்) எனது தலைமையிலும், 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக் குழு உறுப்பினர் ரமணி மாதவன் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் தலைமை கழகத் தொகுதிப் பார்வையாளர், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் பி.டி. பாண்டிச்செல்வம் மற்றும் மதுரவாயல் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர், வளசரவாக்கம், 11 வது மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.

ஆகவே நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், பாக நிலை முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணி மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

இவ்வாறு 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி. மாதவன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சாய் ஜெயகாந்தன் - துரை கபிலன் - எம்.விநாயகமூர்த்தி பங்கேற்பு!

வேளச்சேரி 174 வது வட்டக் கழக (BLA2) பாக முகவர்கள் கூட்டம்!

வட்டக் கழகச் செயலாளர் பெ.ராஜு அறிக்கை!

சென்னை, நவ. 15-

வேளச்சேரி கிழக்குப் பகுதி, 174 வது வட்டக் கழகச் செயலாளர் பெ.ராஜு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்குப் பகுதி, 174 வது வட்டக் கழக பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (15.11.2024 - வெள்ளிக் கிழமை) மாலை 6 மணிக்கு, சாஸ்திரி நகர், 7 வது குறுக்கு தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வேளச்சேரி தொகுதி பார்வையாளர் சாய் ஜெயகாந்தன், வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் துரை.கபிலன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.விநாயகமூர்த்தி ஆலோசனை வழங்குகின்றனர்.

இக்கூட்டத்தில் 174 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ராதிகா, அடையார் சி.சுரேஷ், அ.ரவிகிருஷ்ணன், த.செல்வம், பா.சின்னதம்பி, கி.ஆனந்த் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு 174 வது வட்டக் கழகச் செயலாளர் பெ.ராஜு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகரில் நடைபெறவுள்ள வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம்களில் கழகத் தோழர்கள் மும்முரமாக ஈடுபடுவீர்!

மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

தாம்பரம் மாநகரத்திற்குட்பட்ட, தாம்பரம் சட்டமன்றத் தொகுதி, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய வாக்குச்சாவடிகளில் வருகின்ற கீழ்காணும் தேதிகளில் நடைபெறவுள்ள புதிய வாக்காளர் சேர்த்தல், நீக்கல், இடம் மாற்றம் மற்றும் திருத்தம் பணிகளுக்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

16.11.2024 (சனிக்கிழமை)

23.11.2024 (சனிக்கிழமை)

17.11.2024 (ஞாயிற்றுகிழமை)

24.11.2024 (ஞாயிற்றுகிழமை)

இம்முகாமினை மிகுந்த கவனத்தோடு பகுதி கழகச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆகியோர்கள் அந்தந்த பாகத்தில் நியமிக்கப்பட்ட பாகநிலை முகவர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாக சென்று புதிய வாக்காளர்களை கண்டறிந்து வாக்காளர்களாக சேர்த்திட மேற்சொன்ன தேதிகளில் நடைபெறவுள்ள முகாம்களில் அந்தந்த வாக்குச்சாவடிகளில், நிர்வாகிகள், கழகத் தோழர்கள் களப்பணியில் ஈடுப்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.

தாம்பரம் மாநகர கழகச் செயலாளர்

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30 அ வட்டக் கழகத்தின் சார்பில் பாக முகவர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் ஆய்வு கூட்டத்தில் மாநில மருத்துவர் அணை துணை தலைவர் டாக்டர் ஜே. அருண், பகுதிகழக செயலாளர் துக்காராம், புத்தகரம் ஏழுமலை , மூலக்கடை மோகன், வட்டக் கழக செயலாளர் டி. சுந்தரம், இராமன், பரமேஸ்வரி, சக்கரபாணி, என் சுரேஷ், அபிப்பிரகுமான், ஏ வி முருகன், என் ராஜு , எம் சீனிவாசன், கே நரேந்திரன், பிஎஸ்என்எல் தயாளன், உமா மகேஸ்வரி, டிவிஎஸ் கோபி, மாதவி, கண்மணி, கோவிந்தம்மா, செண்பகராஜ், கௌதமன், வெற்றிவேல், பிஎஸ்என்எல் குமார், பி எஸ் உதயநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதியில் பி.விஜயகுமார் தலைமையில் ஆர்.பாபு என்கிற சந்திரசேகர் முன்னிலையில் 58, 58அ வட்டம் ஒன்றிணைந்து பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் எழும்பூர் தொகுதி மேற்பார்வையாளர் மருத்துவர் யாழினி, மற்றும் எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர் கலந்துகொண்டு BLA 2 நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கி சிறப்பித்தனர். இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன், 58 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், பகுதி அவை தலைவர் எஸ்.ரசூல், பகுதி கழக துணை செயலாளர் டி.வி.வேலு, பொருளாளர் எஸ். ஜெகதீசன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் வெற்றிவேலன், அமைப்புசாரா மாவட்ட துணை அமைப்பாளர் அ.தங்க செல்வம், தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஜெ.அமர்நாத், பகுதி ஒருங்கிணைப்பாளர் முகமது ஷேக் பரீத், பகுதி ஒருங்கிணைப்பாளர் முனிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜெ.சண்முகம் தலைமை! வரலட்சுமி மதுசூதனன் முன்னிலை! செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி

வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

காஞ்சிபுரம், நவ. 15

செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (B.L.A.2) தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் (B.L.C) கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (15.11.2024 வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு, மறைமலைநகர், ஆழ்வார் பேலஸில் நடைபெறுகிறது.

மறைமலைநகர் நகரமன்றத் தலைவர், மறைமலைநகர் நகரச் செயலாளர் ஜெ.சண்முகம் தலைமை வகிக்கிறார்.

மாவட்டத் துணைச் செயலாளர், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர மன்றத் தலைவர், நகரச் செயலாளர் எம்.கே.டி.கார்த்திக், காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் பி.சந்தானம், காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

கூட்டத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தொகுதிப் பார்வையாளர் பிரபு கஜேந்திரன், து.மூர்த்தி, க.அன்புச்செல்வன், செ.அருள்தேவி, ஜிஜேந்திரன் ராமு, என். கனகராஜ், எஸ்.ஆல்பர்ட், ஜான் தினகரன், த.வினோத்குமார், உதயா கருணாகரன், தேன்மொழி நரேந்திரன், ஜி.கே.லோகநாதன், சித்ரா கமலக்கண்ணன் மற்றும் செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதியில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள், தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் அனைவரும் முழுமையாக இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.கமலக்கண்ணன் நன்றி கூறுகிறார்.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி

43(அ) வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

வட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜெ.பிரேம்ஆனந்த் அறிவிப்பு!

சென்னை நவ:15

சென்னை வடக்கு மாவட்டம்,43 அ வட்ட கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது.இது குறித்து வட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜெ. பிரேம்ஆனந்த் அறிவிப்பு வருமாறு;

சென்னை வடக்கு மாவட்டம்,ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (15.11.2024 வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் காசி மேடு கலைஞர் நூற்றாண்டு விழா மண்டபத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, அறிவுறுத்தலின்படி ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் ஆலோசனைக்கிணங்க நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் டில்லிதுரை தலைமை தாங்குகிறார், வட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஜெ. பிரேம்ஆனந்த் முன்னிலை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் இரா.மதிவாணன், பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, எஸ்.கே.இளங்கோ, இரா.மகேந்திரன், கே.எம்.சேகர், பி.செல்வராஜ், ஏ.வெங்கடேஷ், வீ.வீ.ரமேஷ், கே.ராமமூர்த்தி, பி.சுமன், ராஜேந்திரன், கே.பூங்கோதை, எல்.ரமேஷ், எம்.ஜெயச்சந்திரன், எஸ்.கலா, அ.சிவராஜ், எஸ்.முத்தமிழன், வி.சிவா, எம்.அருண்குமார், ஜெ.சிவகுமார், ஜெ.விஜேஷ், உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் நமது வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகி கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,பாக முகவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஜெ.பிரேம் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகரத்துக்கு உட்பட்ட இஸ்லாம் நகரை சேர்ந்த அப்பாஸ், ஷம்சாத் ஆகியோரின் மகன் நௌஷாத் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்வதனை அறிந்த மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது குடும்பத்தினரை அழைத்து இருதய மருத்துவ சிகிச்சைக்காக நிதி உதவி வழங்கினார் .

எழும்பூர் 99-வது வார்டில்

வீதிகள் தோறும் மக்கள் குறை!

மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி கேட்டறிந்தார்

சென்னை, நவ. 15-

எழும்பூர் வார்டு 99 உள்ளடக்கிய புரசைவாக்கம் சுந்தரம் தெருவில் அமைந்துள்ள நியாய விலைக் கடை மற்றும் அழகப்பா ரோடு லாடர்ஸ் கேட் பகுதியில் உள்ள இரண்டு நியாய விலை கடையில் திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் எழும்பூர் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகள் கேட்டு அறிந்தார்.

அதன் பின்னர் புரசைவாக்கம் சுந்தரம் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் அதே வளாகத்தில் அமைந்துள்ள குழந்தைகள் மையம், சத்துணவு கூடம், பெருநகர சென்னை மாநகராட்சி நடத்தும் சமுதாயக் கல்லூரியிலும் ஆய்வினை மேற்கொண்டார். உடன் மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

மேலும் வெள்ளலார் தெரு, ஆதியப்பா தெரு, பொன்னன் 1,2,3, தெருக்கள், ராதாகிருஷ்ணபுரம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு, புல்லாபுரம் 1 முதல் 8 தெருக்கள் புல்லாபுரம் பகுதியில் உள்ள நியாய விலை கடை, புரசைவாக்கம் பண்டாரம் லேன், மற்றும் புரசைவாக்கம் நெடுஞ்சாலை ஆகிய தெருக்கள், திமுக அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஆய்வினை மேற்கொண்டார்.

இதில் 99வது வார்டு வட்டக் கழகச் செயலாளர் ஆர். எம்.ரங்கநாதன், மாவட்ட பிரதிநிதி சபாஸ்டின், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி துணை அமைப்பாளர் புரசை சதீஷ், துப்புரவு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, ரசாக், புல்லாபுரம் ஜோசப், கிரண் குமார், அன்னை பாஸ்கர், விக்னேஷ், மற்றும் கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ. பெரியண்ணன்

நவம்பர் 15 (1996)

புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளராக 1974ஆம் ஆண்டு முதல் பல்லாண்டு காலம் தொடர்ந்து பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது மிசாவில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இருமுறை சட்டப்பேரவை உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர்.

1996ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்தபோது அரசின் கொறடாவாக பணியாற்றினார்.

"அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார். இது செய்தி அல்ல. என் இதயத்தில் மட்டுமல்ல கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டுவிட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி பெரியாரின் கொள்கைகளை, அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்த மாவட்டத்தின் புலிப்போத்து அவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் இவருக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் 'அண்ணா விருதி'னை வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.